டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 18.10.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 101 | Madurai | Online Edition

# வேளாண்-உணவு அமைப்பு முறைகளுக்கான செயற்கை நுண்ணறிவு குறித்த உலகளாவிய முன்முயற்சியின் இரண்டாவது கூட்டம்

புது தில்லி, அக்.17

மத்திய அரசின் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொலைத்தொடர்புத் துறையின் பொறியியல் மையம் சார்பாக, இந்திய மொபைல் காங்கிரஸ் 2026-ன் ஒரு பகுதியாக, ஐக்கிய நாடுகள் சபையின் வேளாண்-உணவு அமைப்பு முறைகளுக்கான செயற்கை நுண்ணறிவு குறித்த உலகளாவிய முன்முயற்சியின் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இந்தக் கூட்டம், வேளாண் மற்றும் உணவு அமைப்பு முறைகளில் இணையம் சார்ந்த செயல்பாடுகள், செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் பயன்பாடு குறித்த உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. சர்வதேச அமைப்புகள், அரசுத் துறைகள், வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கல்வித்துறை, தொழில் துறையைச் சேர்ந்த சுமார் 70 பேர் நேரிலும் 25 பேர் இணைய வழியிலும் இதில் பங்கேற்றனர்.

வேளாண்-உணவு அமைப்புமுறைகளுக்கான செயற்கை நுண்ணறிவு குறித்த உலகளாவிய முன்முயற்சியின் தலைவர் டாக்டர் செபாஸ்டியன் போஸ், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் மூத்த நிபுணர் திரு கிருஷ்ணன் பல்லசனா உள்ளிட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வேளாண் நடைமுறைகளை மாற்றுவதிலும், வேளாண்-உணவு அமைப்பு முறைகளை வலுப்படுத்துவதிலும் செயற்கை நுண்ணறிவு, இணையம் சார்ந்த செயல்பாடுகள், டிஜிட்டல் இணைப்பு ஆகியவற்றின் வளர்ந்து வரும் பங்கை இந்தக் கூட்டம் எடுத்துக்காட்டியது.



## விடுமுறை அறிவிப்பு

சரஸ்வதி பூஜை மற்றும் விஜயதசமியை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 19.10.26 திங்கள்கிழமை விடுமுறை.
எனவே எமது அடுத்த மின்னிதழ் 21.10.26 புதன்கிழமை வெளிவரும்.

- நிர்வாகி

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் கருத்துக்காட்சி அரங்கினை பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர்



சேலம், அக்.17

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கருத்துக்காட்சி அரங்கினை, மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் பார்வையிட்டார்.

இக்கருத்துக்காட்சி அரங்கில், உயிர்மச்சான்று பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் ராபி பருவத்திற்கேற்ற நிலக்கடலை, பச்சைப்பயறு, உளுந்து உள்ளிட்ட பயறு வகைகள் மற்றும் சோளம், தினை, பணிவரகு, சாமை, குதிரைவாலி உள்ளிட்ட சிறுதானியப் பயிர்களின் உயர் விளைச்சல் இரகங்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

இக்காட்சியினைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியரிடம், விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அ.நவநீதகிருஷ்ணன், உயிர்மச்சான்று பெறுவதற்கான வழிமுறைகள், சான்றளிப்பு நடைமுறைகள் மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட உயர் விளைச்சல் இரகங்கள் குறித்து விளக்கமளித்தார். மேலும், இக்காட்சியினை ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டு, உயிர்மச்சான்று பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் உயர் விளைச்சல் இரகங்கள் குறித்த விவரங்களை அறிந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) / வேளாண்மை துணை இயக்குநர் ந.கமலம், விதைச்சான்று அலுவலர்கள் ப.கௌரிசங்கர் மற்றும் மணிமொழி ஆகியோர் உடனிருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# ஜெயங்கொண்டான் கிராமத்தில் பயறு வகைகளில் தன்னிறைவு பெறுதல் குறித்த பயிற்சி!

விழுப்புரம், அக்.17

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டாரத்திற்குட்பட்ட ஜெயங்கொண்டான் கிராமத்தில், பயறு வகைகளில் தன்னிறைவு பெறுதல் குறித்த உள் மாவட்ட விவசாயிகள் பயிற்சி 16.10.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை அலுவலர் செந்தில்நாதன் தலைமை வகித்தார்.



நிகழ்ச்சியில் ராஜாதேசிங் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் இயக்குநர், பாலு, உதவி வேளாண்மை அலுவலர், திருநாவுக்கரசு, வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர், ஸ்ரீதேவி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள், ஜெய கணேஷ், கவிதா ஆகியோர் கலந்து கொண்டு விவசாயி களுக்குப் பயிற்சி வழங்கினர்.

பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரித்தல், தரமான விதை களைப் பயன்படுத்துதல், நவீன சாகுபடி தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், பயறு சாகுபடியில் உள்ள வாய்ப்புகள் மற்றும் பயறு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதன் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயறு வகைகளின் சாகுபடியை மேம்படுத்தி, உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# 'அக்ரி டாக்டர்' ராதாகிருஷ்ணனுக்கு வேளாண்மைத் துறையில் புரட்சியாளர் விருது

## தமிழக பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு கவுரவம்!

பெரம்பலூர், அக்.17

விவசாயத் துறையில் சிறப்பான சேவையாற்றிய பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண்மை உதவி இயக்குநரும், நூலாசிரியருமான 'அக்ரி டாக்டர்' ராதாகிருஷ்ணனுக்குத் தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் வேளாண் துறையில் புரட்சியாளர் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது.




மதுரை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பி.எஸ்சி. மற்றும் எம்.எஸ்சி. (வேளாண்மை) பட்டங்களை முடித்தவர் ராதாகிருஷ்ணன். தனியார் வேளாண் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியராகவும், விடுதி காப்பாளராகவும், சர்க்கரை ஆலையில் கரும்பு அலுவல ராகவும், ஏ.எம்.ஏ. பவுண்டேனில் பண்ணை மேலாளராகவும், பல்வேறு அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், என்.ஜி. ஓக்களிலும் பல்வேறு முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றி உள்ளார். பின்னர் டிஎன்பிஎஸ்சி (TNPSC) தேர்வில் வெற்றி பெற்று, வேளாண்மை அலுவலர், விதைச்சான்று அலுவலர் மற்றும் வேளாண் வணிக அலுவலராகப் பணியாற்றி, தற்போது அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் வேளாண்மை உதவி இயக்குநராகத் தரக்கட்டுப்பாடு பிரிவில் பணியாற்றி வருகிறார்.

வேளாண் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பணிபுரிந்த காலத்திலிருந்தே போட்டித் தேர்வுகளுக்கு உதவும் வகையில் புத்தகங்களை எழுதத் தொடங்கிய இவர், இதுவரை 200-க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். குறிப்பாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான போட்டித் தேர்வுகள், வேளாண் மற்றும் தோட்டக்கலை அலுவலர் பணிக்கான சிறப்பு வழிகாட்டிப் புத்தகங்களை எழுதி மாணவர்களுக்கும் இளைஞர் களுக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்து வருகிறார்.

இதுவரை 29 தேசிய மற்றும் சர்வதேச விருதுகள், எம்.எஸ். சுவாமிநாதன் விருது, டாக்டர் நார்மன் போர்லாக் இளம் விஞ்ஞானி விருது, டாக்டர் வர்கீஸ் குரியன் சிறந்த விரிவாக்கப் பணியாளர் விருது மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் இருந்து சிறந்த பணியாளருக்கான விருதையும் பெற்றுள்ளார்.

மேலும், 2025-ஆம் ஆண்டு உலக மனித அமைதிப் பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டமும், அறம் செய்ய விரும்பு அறக்கட்டளையின் வாழ்நாள் சாதனையாளர் விருதும் பெற்றுள்ளார். மகளிர் மற்றும் மக்கள் சட்ட உரிமைகள் இயக்கம் நடத்திய செந்தமிழ் விருதுகள் விழாவில் வாழ்நாள் சாதனை யாளர் விருது வழங்கிக் கவுரவிக்கப்பட்டதுடன், சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றுள்ளார்.

பல்வேறு கருத்தரங்குகளில் கலந்து கொண்டதுடன், விவசாயி களுக்கான நவீனத் தொழில்நுட்பச் செய்திகள் அடங்கிய 75-க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு யூடியூப் வீடியோக்களை வெளியிட்டு ஆயிரக்கணக்கான விவசாயிகளின் துயர் துடைக்க உதவியுள்ளார்.

இவரது பன்முகச் சேவையைப் பாராட்டித் தமிழ்நாடு பத்திரிகை யாளர்கள் கூட்டமைப்பு இவருக்கு வேளாண்மைத் துறையில் புரட்சியாளர் விருதும் பதக்கமும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் இவரைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சர்வதேச பெண் விவசாயிகள் தினம் மற்றும் பயிற்சி



நாமக்கல், அக்.17

நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் சர்வ தேச பெண் விவசாயிகள் தினம் வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

நாமக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர், (பொ) இரா.பிரேமா, தலைமை வகித்துப் பேசியதாவது, தற்போது வேளாண்மை ஓர் முக்கிய தொழிலாக உள்ள நமது இந்தியாவில், தமிழ்நாட்டில் பெண் விவசாயிகளே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். விவசாயிகளாக மட்டுமின்றி வேளாண்மையில் பல்வேறு தொழில்நுட்பங்களை புகுத்தக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாகவும் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர். குறிப்பாக ஆண் விவசாயிகளுக்கு வழிகாட்டக்கூடிய நிலையில் பெண் விவசாயிகள் திகழ்கின்றனர் என புகழாரம் சூட்டினார்.

பயிற்சியில் கலந்து கொண்டு பெண் விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை மதிப்புக் கூடுதல் செய்து தொழில் முனைவோராக வளர்ச்சி பெறவேண்டும். குறிப்பாக உயிர்ம வேளாண்மை மூலம் சாகுபடி செய்து நஞ்சில்லா தேசத்தை உருவாக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்ட வேளாண்மைத் துறையின் வேளாண்மை இணை இயக்குநர் (பொ) இரா.பிரேமா, வேளாண்மை அறிவியல் நிலைய தலைமை பேராசிரியர் சசிகலா, வேளாண்மை பொறியியல் துறையின் செயற் பொறியாளர், பத்மாவதி, வேளாண்மை துணை இயக்குநர்கள், மணிமேகலா தேவி, மத்திய திட்டம், கவிதா, மாநிலத்திட்டம், தோட்டக்கலை துணை இயக்குநர் புவனேஸ்வரி, வேளாண்மை அறிவியல் நிலைய மண்ணியல் உதவி பேராசிரியர் சிவரஞ்சனி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினர்.

பயிற்சியில் சிறப்பு பெண் முன்னோடி விவசாயிகள் தங்கமணி இரவி, கலைவாணி இராமகிருஷ்ணன் ஆகியோர் தங்களது இயற்கை வேளாண்மை பண்ணை அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். சிறப்பு பெண் தொழில்முனைவோர் மகிழ் குழும நிறுவன இயக்குநர், இலக்கியா இராமசாமி, ஆரைக்கல் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர், புனிதா தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது வெற்றிக்கதை பகிர்ந்து கொண்டனர். பெண் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது மகிழ்வை தெரிவித்தனர். விழாவிற்கு வருகை புரிந்த அனை வருக்கும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.கவிதா நன்றியுரை வழங்கினார்.




# விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்த வேளாண்மை மாணவிகள் : களப்பயிற்சியில் தீர்வு காண முயற்சி



திருச்சி, அக்.17

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பூனாம்பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

மாணவிகளின் இக்களப்பயிற்சியானது கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ.வெங்கடபிரபு வழிகாட்டுதலிலும், பாட ஆசிரியர் ம.மோகன்ராஜ் மேற்பார்வையில், குழு ஒருங்கிணைப்பாளர்களான மா.ஆர்த்தி மற்றும் முனைவர் இ.சந்தோஷினி ஆகியோர் ஆலோசனையிலும் நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் வடக்கிபட்டி கிராம விவசாயிகளை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது பயிர்களில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள், பாசன நீர் பற்றாக்குறை, உரங்களின் விலை உயர்வு மற்றும் சாகுபடியில் உள்ள இடர்பாடுகள் குறித்து விவசாயிகள் எடுத்துரைத்தனர்.

மேலும், விளைபொருட்களைச் சந்தைப்படுத்துவதில் உள்ள சவால்கள், இடைத்தரகர்களின் தலையீடு மற்றும் உரிய விலை கிடைப்பதில் நிலவும் சிரமங்கள் பற்றியும் மாணவிகள் கேட்டறிந்தனர்.

வகுப்பறையில் கற்ற தொழில்நுட்பங்களை தொடர்புபடுத்திப் பார்க்கவும், கிராமப்புற விவசாயிகளின் தேவைகளை உணர்ந்து எதிர்காலத்தில் சிறந்த கள ஆலோசனைகளை வழங்கவும் இச்சந்திப்பு தங்களுக்குப் பெரும் அனுபவமாக அமைந்ததாக மாணவிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# விவசாய பெண்கள் தினம்




கோயம்புத்தூர், அக்.17

வேளாண் அறிவியல் நிலையமும் கோவை மாவட்ட வேளாண்மை துறையும் இணைந்து அக்டோபர் 15ஆம் தேதி, விவசாய பெண்கள் தினத்தை சிறப்பாக கொண்டாடியது. இந்த நிகழ்வில் நமது நிலையத்தின் உளவியல் துறை வல்லுநர் சுரேஷ் குமார், நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். அதனைத் தொடர்ந்து நமது நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் பொறுப்பு பா கோமதி, கலந்து கொண்டு விவசாய பெண்கள் தினம் கொண்டாடுவதற்கான நோக்கங்கள் அதன் சிறப்புகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். மேலும் நமது வேளாண்மை துறையில் இருந்து நிர்மலா, துணை இயக்குனர் மத்திய திட்டம், கலந்து கொண்டு வேளாண்மை துறையில் உள்ள மத்திய, மாநில அரசின் திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக வேளாண்மை விற்பனை துறையில் இருந்து ஹெல்டா, வேளாண் அலுவலர், கலந்து கொண்டு வேளாண் விற்பனை துறையில் உள்ள வாய்ப்புகள் பற்றியும் மற்றும் அவற்றில் இருக்கக்கூடிய நலத்திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் முன்னாடி விவசாய பெண்மணிகள் கலந்து கொண்டு தங்களின் விவசாய அனுபவங்களை பகிர்ந்தனர். அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நமது நிலையம் அவர்களுக்கு பரிசுகளையும் வழங்கி ஊக்கப்படுத்தியது. இந்த நிகழ்ச்சிக்கு வேளாண் மகளிர் சுய உதவிக் குழு பெண்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள் மற்றும் வேளாண் கல்வி பயிலும் மாணவர்களும் சுமார் 70-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாய பெண்மணி அனைவருக்கும் வேளாண் துறை சார்பாக ஒவ்வொருவருக்கும் ஒரு தென்னை நாற்று வழங்கப்பட்டது. இறுதியாக காரமடை வட்டாரத்தின் வேளாண் அலுவலர் செல்வி மேகலா தேவி நன்றி உரை கூறினார்.

# தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து RAWE மாணவர்கள் கள ஆய்வு



திருவாரூர், அக்.17

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் (Primary Agricultural Cooperative Credit Society – PACCS), கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு B.Sc. (Hons.) Agriculture மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கள ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில், சித்ரா, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிதிச் சேவைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்தார். விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் வழங்குதல், விவசாய இடுபொருட்களைப் பெறுவதற்கான நிதி உதவி, வேளாண் பணிகளுக்கான கடன் வசதிகள், கடன் திருப்பிச் செலுத்தும் நடைமுறைகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து மாணவர்கள் கேட்டறிந்தனர். மேலும், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் பெரிய விவசாயிகள் ஆகியோரின் நில உடைமை அடிப்படையிலான வகைப்பாடு, அவர்களின் வேளாண் தேவைகள் மற்றும் பயிர் சாகுபடிக்கான நிதி ஆதாரங்கள் குறித்தும் விளக்கப்பட்டது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு (SHGs) வழங்கப்படும் கடன் வசதிகள், குழு சேமிப்பு, சுயதொழில் தொடங்குவதற்கான நிதிஉதவி மற்றும் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்தில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இதனுடன் விவசாயிகளுக்கான சேமிப்பு வசதிகள், கடன் விண்ணப்ப நடைமுறைகள், பயிர்க்கடன் தகுதி, நிதி மேலாண்மை மற்றும் அரசு வேளாண் திட்டங்கள் குறித்த தகவல்களை விவசாயி களிடம் கொண்டு சேர்ப்பதில் கூட்டுறவு கடன் சங்கங்களின் பங்கு பற்றியும் மாணவர்கள் அறிந்துகொண்டனர். இந்தக் கள ஆய்வின் மூலம், RAWE மாணவர்கள் கிராமப்புற வேளாண் கடன் அமைப்பு, விவசாயிகளின் நிதித் தேவைகள், சுய உதவிக் குழுக்களுக்கான கடன் வசதிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றும் பங்களிப்பு ஆகியவற்றை நடைமுறை அனுபவத்தின் மூலம் புரிந்து கொண்டனர்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர்,
ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள்
கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விவசாயி இன்றி அமையாது உணவு - ஒரு பார்வை



நீரின்றி அமையாது உலகு' என்றார் வான்புகழ் வள்ளுவர். அதுபோல இன்றைய காலகட்டத்தில் விவசாயிகள் சேற்றில் கால்வைத்தால் தான் நாம் இன்று உணவில் கை வைக்க முடியும். விவசாயிகள் இன்றி உணவு அமையாது என்பதில் மாற்று கருத்து கிடையாது.

**உணவின் அவசியம் முக்கியத்துவம் குறித்து மகாகவி பாரதியார் என்ன பாடியுள்ளார்? தெரியுமா?**

தனி ஒருவனுக்கு உணவில்லை என்றால் இந்த ஜெகத்தினை அழிப்பேன் என்றார் பாரதி. அதுமட்டுமல்ல மேலும் தனது பாடலில் 'வாழும் மனிதர்கெல்லாம் வயிறார சோறிட வேண்டும் என்றார். அப்படி என்றால் பசியின் ஆழம், அதன் மீதான அக்கரை எப்படி வெளிப்படுகிறது பார்த்தீர்களா?

**உணவின் முக்கியத்துவம் என்ன?**

உணவின் முக்கியத்துவத்தை உணர்ந்து உணவை வீணாகு வதைத் தடுப்பதுடன் மட்டுமல்லாது உலகின் பசியை போக்கு வதுடன், அனைவருக்கும் ஊட்டசத்து மிக்க உணவு கிடைப்பதை உறுதி செய்வது உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களை வலியுறுத்தும் வகையில் அக்டோபர் 16ம் தேதி 'உலக உணவு தினம்' கொண்டாடப்பட்டது என்பது நாம் அறிந்ததே.

**இந்த ஆண்டு உலக உணவு தினத்தின் கருப்பொருள் என்ன?**

'இன்றே புதுமைகளைப் புகுத்துவோம், நாளைய ஊட்டசத்தை உறுதி செய்வோம்' (INVOVATE TODAY NOURISH TOMORROW)

மனித வாழ்வின் அடிப்படைத் தேவையில் முக்கிய தேவையாக இருப்பது உணவு. உணவின்றி உயிர் இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தரமான ஊட்டசத்து நிறைந்த உணவு கிடைக்க வேண்டும் என்பதே இந்த உலக உணவு தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் வறுமை, போர், பசி, இயற்கை பேரிடர், காலநிலை மாற்றம், உணவு பொருட்கள் விலை உயர்வு உள்ளிட்ட காரணங்களால் மக்களுக்கு போதிய உணவுப் பொருட்கள் கிடைக்காமல் பாதிக்கப்படுகின்றனர். உலக பட்டினி நாடுகள் வரிசையில் நமது நாடு 102வது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளின் பங்கு உணவு உற்பத்தியில் எப்படி?**

உலக மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில், விவசாயிகளின் பங்கு அளப்பரியது. மழை, வெயில், வெள்ளம், வறட்சி உள்ளிட்ட பல்வேறு சவால்களை எதிர் கொண்டு நிலத்தை உழுது பயிரிட்டு உணவு தானியங்களை உற்பத்தி செய்கிறார்கள். விவசாயிகளின் உழைப்பை மதிப்பதுடன் நீர் மேலாண்மை, மண்வள பாதுகாப்பு, இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தரமான உணவு உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.

**ஆரோக்கியமாக வாழ என்னென்ன உணவுகளை உட்கொள்ள வேண்டும்?**

அரிசி, சிறு தானியங்கள், பருப்பு வகைகள், பழங்கள், பால், முட்டை, பருப்பு, கீரை வகைகள் உள்ளிட்ட ஊட்டசத்து நிறைந்த உணவு வகைகளை சரிவிகித்தில் உட் கொள்ளுவது ஆரோக்கிய மாக வாழ உதவுகிறது.

**உலக உணவு தினத்தை முன்னிட்டு நாம் செய்ய வேண்டியது என்ன?**

1) பொதுமக்களாகிய நாம் அன்றாட வாழ்க்கையில் உணவு வீணாவதை தடுக்கும் பழக்கங்களை பின்பற்ற வேண்டும்.

2) சாப்பிடும் போது உணவைத் தட்டில் மீதம் வைக்காமல் சாப்பிட வேண்டும்.

3) தங்களுடைய தேவைக்கேற்ப உணவு பொருட்களை கேட்டு வாங்கி சாப்பிட வேண்டும்.

4) உணவு பொருட்களை சரியான முறையில் பாதுகாத்து சேமிக்க வேண்டும்.

உணவை மதிப்போம்! விவசாயிகளின் உழைப்பை போற்றுவோம்!! உணவு வீணாகுவதை தடுப்போம்!!!

அனைவருக்கும் உணவு கிடைக்கும் பசியில்லா உலகைப் படைப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# உயிர் மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு வேறுபாடுகள் குறித்து வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கப் பயிற்சி




பெரம்பலூர், அக்.17

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், நக்கசேலம் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள், வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு அங்கமாக, மாணவிகள் நக்கசேலம் கிராம விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு வேறுபாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவங்கள் குறித்து செயல் விளக்க பயிற்சியளித்தனர்.

**உயிர் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியவற்றின் முக்கிய பயன்பாட்டு வேறுபாடுகளாவன :** உயிர் உரங்கள் (Biofertilizers) முற்றிலும் இயற்கையான, நுண்ணுயிரிகளைக் கொண்டு தயாரிக்கப்படும் உரங்கள் ஆகும். இவை மண்ணின் வளத்தை இயற்கையான முறையில் மேம்படுத்தி, காற்றில் உள்ள நைட்ரஜனை நிலைநிறுத்தவும், மண்ணில் உள்ள சத்துக்களைச் செடிகள் எளிதாக உறிஞ்சவும் உதவுகின்றன. இதனால் மண் வளம் நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கப்படுகிறது, பயிர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை, மேலும் செலவும் மிகவும் குறைவு.

ஆனால், இரசாயன உரங்கள் (Chemical Fertilizers) தொழிற்சாலைகளில் இரசாயனப் பொருட்கள் கொண்டு செயற்கையாகத் தயாரிக்கப்படுபவை.

தாவரங்களுக்குத் தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்ற ஊட்டச் சத்துக்களை நேரடியாகவும் உடனடியாகவும் வழங்குகின்றன. ஆனால், இவற்றைத் தொடர்ந்து பயன் படுத்தினால் மண்ணின் வளம் சீர்கெட்டு, மண் கடினமாகிவிடும்.

இப்பயிற்சியின் மூலம் உயிர் மற்றும் இரசாயன உரங்களின் பயன்பாட்டு முக்கியத்துவம், அவற்றை தயாரிக்கும் முறை மற்றும் பயிர் வளர்ப்பில் அவற்றின் பங்கு குறித்த சந்தேகங் களை விவசாயிகள் மாணவிகளிடம் தெளிவாக அறிந்து கொண்டனர்.



# மகளிர் விவசாயிகள் தினத்தில் நானோ உரங்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி

சென்னை, அக்.17

இப்கோ நிறுவனம், வேளாண்மைத் துறையுடன் இணைந்து, மகளிர் விவசாயிகள் தினத்தை முன்னிட்டு, விருதுநகர் மாவட்டம், சாத்தூர் மற்றும் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் (KVK) பெண் விவசாயி களுக்கான நானோ உரங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

சாத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை இயக்குநர் (ADA), வேளாண்மைத் துணை இயக்குனர் (DDGOI) மற்றும் வட்டார வேளாண்மை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். நீடாமங்கலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு திருவாரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வித்யா, தலைமை தாங்கினார். வேளாண்மை அறிவியல் நிலையத் தலைவர் தனுஷ்கோடி மற்றும் வேளாண்மைத் துணை இயக்குனர் (DD – GOI&SS) ஆகியோர் பங்கேற்றனர்.

இப்கோ கள அலுவலர்கள் சரவணகுமார் மற்றும் பரஞ்சோதி ஆகியோர், இப்கோவின் நானோ டிஏபி, நானோ யூரியா, நானோ காப்பர், நானோ ஜிங்க் மற்றும் சாகரிகா ஆகியவற்றின் பயன் பாடுகள் மற்றும் பயிர் உற்பத்தியை மேம்படுத்துவதில் அவற்றின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, சமச்சீர் உரமிடுதல் மற்றும் மண்வளத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் NPK கன்சார்டியா மற்றும் உயிரிச் சிதைப்பான் (Bio-De-composer) ஆகியவற்றின் பங்கு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில், கலந்து கொண்ட அனைத்து விவசாயி களும் தங்கள் பயிர்களில் இனி இப்கோ நானோ உரங்களைப் பயன்படுத்துவதாக உறுதியளித்தனர்.






# தேக்கு மரக்கன்றுகள் நடவு பணியில் வேளாண் மாணவர்கள் பங்கேற்பு



திருவாரூர், அக்.17

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டாரம், கண்டிரமானிக்கம் கிராமத்தில் அக்டோபர் 14ஆம் தேதி விவசாயி சூர்யாவின் வயலில் தேக்கு மரக்கன்றுகள் நடவு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வேளாண் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, விவசாயி சூர்யாவுடன் இணைந்து தேக்கு மரக்கன்றுகளை நடவு செய்தனர். தேக்கு மரக்கன்றுகளை நடவு செய்வதற்கான முறைகள், குழி அமைத்தல், கன்றுகளை முறையாக நடவு செய்தல் மற்றும் நடவுக்குப் பிந்தைய பராமரிப்பு முறைகள் குறித்து மாணவர்கள் நேரடியாகக் கற்றுக்கொண்டனர்.

மேலும், மரம் வளர்ப்பதன் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் பாது காப்பு மற்றும் விவசாய நிலங்களில் மரப்பயிர்களை வளர்ப்பதால் கிடைக்கும் நீண்டகால நன்மைகள் குறித்தும் அறிந்து கொண்டனர். இந்த நிகழ்வின் மூலம் மாணவர்கள் நேரடி கள அனுபவத்தைப் பெற்று, மரக்கன்றுகள் நடவு செய்வதில் தங்களது நடைமுறைத் திறன்களை வளர்த்துக் கொண்டனர்.

# பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த களப்பயணம்

நாகப்பட்டினம், அக்.16

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, நெல் ஜெயராமனின் இல்லத்திற்குக் களப்பயணம் மேற்கொண்டனர்.

இந்தக் களப்பயணத்தின் போது, பாரம்பரிய நெல் ரகங்கள் பார்வையிடப்பட்டு, அவற்றின் தனித்தன்மைகள், முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்பு முறைகள் குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், இயற்கை வேளாண்மையில் பின்பற்றப்படும் சாகுபடி முறைகள் மற்றும் பஞ்சகவ்யம், பனம்பழம் போன்ற வற்றின் பயன்பாடுகள் குறித்தும் தெரிந்துகொண்டனர்.



இக்கற்றல் அனுபவம், பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் இயற்கை வேளாண்மை முறைகளின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் புரிந்து கொள்ள உதவியது.

# இயந்திர நெல் நடவு முறையைப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருவாரூர், அக்.17

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மூங்கில்குடி கிராமத்தில் செயல் படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின் ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் இயந்திர நெல் நடவு முறை நேரில் பார்வையிட்டனர்.

இக்கள ஆய்வின்போது, இயந்திர நெல் நடவுக்கான நாற்றுகள் தயாரிக்கும் முறை, நடவு இயந்திரத்தின் செயல்பாடுகள் மற்றும் நாற்றுகளைச் சீரான இடைவெளியில் நடவு செய்யும் தொழில்நுட்ப முறைகள் குறித்து விளக்கங்கள் பெறப்பட்டன. இயந்திர நெல் நடவு முறையின் மூலம் மனித உழைப்புச் செலவு குறைக்கப்படுதல், குறுகிய காலத்தில் அதிகப் பரப்பளவில் நடவுப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சீரான பயிர் வளர்ச்சியைப் பெறுதல் போன்ற நன்மைகள் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், இயந்திர நெல் நடவின்போது கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்ப முறைகள், நாற்றுகளின் வயது, வயல் தயாரிப்பு மற்றும் நடவு இயந்திரத்தைப் பராமரிக்கும் முறைகள் குறித்தும் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இக்களப்பயணத்தின் மூலம் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நெல் சாகுபடி முறைகள் குறித்த நடைமுறை அறிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இத்தகைய கள ஆய்வுகள் மூலம் வேளாண் மாணவர்களின் தொழில்நுட்ப அறிவும், நவீன சாகுபடி முறைகள் குறித்த புரிதலும் மேம்படுத்தப் பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டை முன்னிட்டு பெண்கள் விவசாயிகள் தின விழா கொண்டாட்டம்



இராமநாதபுரம், அக்.17

2026 ஆம் ஆண்டு சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டாக கடைப்பிடிக்கப் படுவதையொட்டி, இராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில், 15.10.26 அன்று பெண் விவசாயிகள் தின விழா கொண்டாடப்பட்டது. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்தல், அவர்களின் சாதனைகளைப் பாராட்டுதல் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தித் திறனையும் வருமானத்தையும் மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், பெண் விவசாயிகளிடையே தொழில்முனைவோர் திறனை வளர்த்தல், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பை ஊக்குவித்தல் மற்றும் நிலையான வேளாண் நடைமுறை களைப் பரவலாக்குதல் ஆகியவற்றுக்கும் இந்நிகழ்ச்சி முக்கியத்துவம் அளித்தது.

இந்நிகழ்ச்சியில், முனைவர் மு.ஜெகதீசன், வரவேற்புரை வழங்கினார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் கி.இராமகிருஷ்ணன் தலைமையுரையாற்றி, பெண் விவசாயிகளின் முன்னேற்றம் மற்றும் பண்ணை வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறை களை எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் S.வாசுகி, சிறப்புரையாற்றி, வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் பெண் விவசாயிகளின் பங்களிப்பை வலியுறுத்தினார். இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டங்கள்) M.K.அமர்லால், விவசாயி களுக்கான அரசு திட்டங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

மேலும், இயற்கை வேளாண்மை, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, மதிப்புக்கூட்டல், வேளாண் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் பண்ணை வருமானத்தை அதிகரிப்பதற்கான உத்திகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இவ்விழாவில் பெண் விவசாயிகள், விவசாயிகள், இளை–ஞர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் உள்ளிட்ட 113 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விருது பெற்ற பெண் விவசாயிகள் தயாரித்த மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களின் தொழில் முனைவோர் முயற்சிகள் மற்றும் சாதனைகள் எடுத்துரைக்கப் பட்டன.

இதனைத் தொடர்ந்து, உடல் உழைப்பைக் குறைக்கும் வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் உற்பத்தி குறித்த செயல்விளக்கங்கள் நடத்தப்பட்டன. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை விவசாயிகள் பின்பற்றுவதை ஊக்குவிக்கும் வகையில், விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் சிறப்பாகச் செயல்பட்ட ஐந்து பெண் விவசாயிகளின் சாதனைகள் அங்கீகரிக்கப்பட்டன. சீதா ரமேஷ், சிறுதானிய மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பிலும், N.நாகஜோதி ரமேஷ், மீன் சார்ந்த மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பிலும் மேற்கொண்ட தொழில்முனைவோர் முயற்சி களுக்காக அங்கீகரிக்கப்பட்டனர்.

A.பர்வீன் பானு, இயற்கை இடுபொருட்கள் உற்பத்திக்காகவும், R.உசாராணி, மேம்படுத்தப்பட்ட வேளாண் ரகங்களைப் பயன்படுத்தியதற்காகவும், S.யசோதா, உடல் உழைப்பைக் குறைக்கும் தொழில்நுட்பங்களை ஊக்குவித்ததற்காகவும் அங்கீகரிக்கப்பட்டனர்.

மேலும், விருது பெற்ற பெண் விவசாயிகளின் சாதனைகள் மற்றும் புதுமையான முயற்சிகளை எடுத்துரைக்கும் வகையில் அவர்களின் வெற்றிக் கதைகள் ஆவணப்படுத்தப்பட்டன.

நிகழ்ச்சியின் நிறைவாக, முனைவர் A.விஜயகுமார் நன்றியுரை வழங்கினார்.

# உலக உணவு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



சேலம், அக்.17

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் தோட்டக்கலை கல்லூரியில் மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில், தங்கி இருந்து ஊரகத் தோட்டக்கலை அனுபவம் மற்றும் வேளாண் தொழில்துறை இணைப்பு (RAWE) உலக உணவு தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில் M.கனிமொழி, S.ஜெபினா, N.ஹரிணி ஸ்ரீ, T.கண்மணி, B.கார்த்திகா யாதவ், M கஸ்தூரி, P. காவ்யா, S.கயல்விழி, G.கோகிலா, S.கிருத்திகா, D.குப்பம்மாள் மாணவிகள் கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் களுக்கு உலக உணவு தின விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத் தினார்கள். இந்நிகழ்ச்சியில் உணவின் முக்கியத்துவம் சத்து மற்றும் சமச்சீரான உணவின் அவசியம், உணவு வீணாவதை தடுப்பது முக்கியத்துவம் மற்றும் உணவு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மாணவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் விஞ்ஞானிகள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இயந்திர நாற்று நடவு முறையைப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவாரூர், அக்.17

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் (KVK – Krishi Vigyan Kendra) நடைபெற்ற இயந்திர நாற்று நடவு முறையை வேளாண் மாணவிகள் பார்வையிட்டனர். இப்பார்வையின்போது, இயந்திர நாற்று நடவு முறையின் செயல்பாடுகள், அதன் பயன்பாடுகள்

மற்றும் நன்மைகள் குறித்து அறிந்துகொண்டனர். மேலும், நெல் சாகுபடியில் இயந்திர நாற்று நடவு முறையைப் பயன் படுத்துவதன் மூலம் நடவுப் பணியை விரைவாக மேற் கொள்ளுதல், தொழிலாளர் தேவையைக் குறைத்தல் மற்றும் சீரான பயிர் வளர்ச்சியைப் பெறுதல் போன்ற நன்மைகளைப் பற்றியும் தெரிந்துகொண்டனர்.

இந்தக் களப்பார்வை, வேளாண் தொழில்நுட்பங்களை நேரடி யாக அறிந்துகொள்ளவும், நவீன நெல் சாகுபடி முறைகள் குறித்த நடைமுறை அறிவைப் பெறவும் மாணவிகளுக்கு உதவியாக அமைந்தது.



# கிராமப்புறப் பெண்களுடன் வேளாண் மாணவர்கள் குழு விவாதம்



சிவகங்கை, அக்.17

சிவகங்கை மாவட்டம், விசாலயன்கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் பயிலும் மாணவர்கள் வி.ஹேமன், கோ.ஆதித்தியன், வீ.கோகுல் யஷ்வந்த், மு.லெனில் அசோக், ஆ. பால் லித்திக் ராஜ் மற்றும் சே.சேது மாதவன் ஆகியோர் கிராமப்புறப் பெண்களுடன் இயற்கை மற்றும் கனிம உர அடிப்படையிலான விவசாயம் குறித்த குழு விவாதத்தை ஏற்பாடு செய்தனர்.

இக்குழு விவாதத்தில் இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம், தொழு உரம், மண்புழு உரம் மற்றும் மட்கிய உரம் ஆகிய வற்றின் பயன்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், யூரியா மற்றும் டி.ஏ.பி. போன்ற கனிம உரங்களைச் சரியான அளவில் பயன்படுத்துவதன் அவசியம், அதிகப்படியான இரசாயன உரப் பயன்பாட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டன. பெண்கள் தங்களது கருத்துகளையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது.

இக்குழு விவாதத்தின் மூலம் கிராமப்புறப் பெண்களிடையே நிலையான விவசாய முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்தது. மண்ணின் வளத்தைப் பாதுகாத்து, பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு உரங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் அவசியம் எடுத்துரைக்கப்பட்டது.

# நுண் உரமாக்கல் மையத்தில் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் களப்பயிற்சி!




நாகப்பட்டினம், அக்.17

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவிகள் தங்களது ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சியின் (RAWE) இரண்டாம் வார முதல் நாளில், மன்னார்குடியில் அமைந்துள்ள நுண் உரமாக்கல் மையத்திற்கு (MCC - Micro Composting Centre) நேரில் சென்று களப்பயிற்சி மேற்கொண்டனர். இப்பயிற்சியின் போது, நகராட்சி கழிவுகள் மற்றும் காய்கறி கழிவுகளைக் கொண்டு உரம் தயாரிக்கும் நவீன முறைகள் குறித்து மைய அலுவலர்கள் மாணவர்களுக்கு விரிவாக விளக்கமளித்தனர்.

## உரம் தயாரிக்கும் முறை

**கழிவுகள் தயாரிப்பு :** சேகரிக்கப்படும் காய்கறி கழிவுகள் மற்றும் பிற மட்கும் நகராட்சி கழிவுகள் முதலில் இயந்திரங்கள் மூலம் சிறு துண்டுகளாக (Chop) நறுக்கப்படுகின்றன.

**7 குழி முறை மேலாண்மை (7 Pit Method) :** இம்மையத்தில் உரம் தயாரிப்பதற்காக மொத்தம் 7 குழிகள் (Pits) அமைக்கப் பட்டுள்ளன. வாரத்தின் ஒவ்வொரு நாளும் முறையே மாற்றி மாற்றி வெவ்வேறு குழிகளில் நறுக்கப்பட்ட கழிவுகள் நிரப்பப்படுகின்றன.

**விண்ட்ரோ முறை :** நறுக்கப்பட்ட கழிவுகள் 'விண்ட்ரோ முறை' (Windrow Method) மூலம் பரப்பப்பட்டு உரம் தயாரிப்பு செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது.

**ஊட்டச்சத்து கரைசல் தெளிப்பு :** உரமாக்கல் முறையை விரைவுபடுத்த, வாரத்திற்கு ஒருமுறை 3 லிட்டர் தயிர், 5 கிலோ வெல்லம் மற்றும் 20 லிட்டர் தண்ணீர் கலந்த நுண்ணுயிர் கரைசல் கழிவுகளின் மீது தெளிக்கப்படுகிறது.

**உரம் தயார் காலம் :** இக்கரைசல் தெளிக்கப்பட்டு சரியாக 48 நாட்களுக்குள் தரமான இயற்கை உரம் தயாராகி விடுகிறது.

**பயன்படுத்தும் முறைகள் மற்றும் பயன்கள் :** தயாரான இயற்கை உரம் ஸ்டெரிலைசேன் (Sterilization) செய்யப்பட்டு, சலித்தோ அல்லது சலிக்காமலோ விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படு கிறது. இந்த உரம் முக்கியமாக தென்னை மற்றும் நிலக்கடலை பயிர் களுக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இத்தயாரிப் புடன் FSTP (Faecal Sludge Treatment Plant) கழிவுகளையும் சேர்த்துக் கலந்தும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

நகராட்சி மற்றும் காய்கறி கழிவுகளைப் பயனுள்ள முறையில் சுழற்சி செய்து இயற்கை உரமாக்கும் இந்தத் தொழில்நுட்பத்தை நேரில் கற்றுக்கொண்டது தங்களுக்குப் பெரும் பயனுள்ளதாக இருந்ததாக கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் தெரிவித்தனர்.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை விழிப்புணர்வு மற்றும் மகளிர் விவசாய தின கொண்டாட்டம்

மதுரை, அக்.17

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் சி.புதூர் கிராமத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள், விரிவாக்க பணியாளர்கள், விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் விழிப்புணர்வு முகாம் மற்றும் சர்வதேச மகளிர் விவசாயிகள் தினம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இம்முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி, கலந்து கொண்டு வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பிரதம மந்திரி கௌரவ நிதி திட்ட அவசியம் பற்றியும் எடுத்து கூறி தகுதியுள்ள அனைத்து விவசாயிகளும் பதிவு செய்திட வேண்டும் என்றும் மேலும் விவசாயத்தின் மகளிர் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக்கூறினார்.

மேலும் வேளாண்மை கல்லூரி பேராசிரியர் சிவக்குமார், நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை கூறும்போது, நெல்லில் புதிய இரகங்களை சாகுபடி செய்தல், நெற்பயிருக்கு தேவையான உரங்களை பயிர்களின் நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் முறைகளையும் நெற்பயிரில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி எடுத்து கூறி மேலும் மகளிர் விவசாயிகளை தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினார். வேளாண்மை அலுவலர், டார்வின் வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் இடுபொருட்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் உமா, கலந்து கொண்டு மகளிர் விவசாயிகளை நவீன தொழில் நுட்பங்களை கடைபிடித்து அதிக மகசூல் பெறும் உத்திகளை விளக்கி கூறினார். இம்முகாமில் மகளிர் விவசாய பெருமக்கள் கலந்து கொண்டார்கள். உதவி வேளாண்மை அலுவலர் டேவிட் புஷ்பராஜ், விவசாயிகளின் தனித்துவ அடைய எண் பதிவின் முக்கியதுவம் பற்றி எடுத்து விளக்கினார். முடிவில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரியா, நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் பூமிநாதன், அருணாதேவி ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333